www.Padasalai.Net

மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவன இயக்குநரின்

செயல்முறைகள், சென்னை – 06

ந.க.எண்.523/எஃப் - 4/2023 நாள்.10.10.2024.

பொருள் : சென்னை-06 மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனத்தின் மூலம் உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் ஆய்வக உதவியாளர்களுக்கு மாவட்ட அளவிலான பயிற்சியினை 18.03.2024 முதல் 10.05.2024 முடிய நடைபெற்றமை - பயிற்சியில் பங்கேற்காத, தேர்வு எழுதாத, தேர்வில் தோல்வியுற்ற ஆய்வக உதவியாளர்களுக்கு மீள பயிற்சியினை 14.10.2024 முதல் 19.10.2024 முடிய மண்டல அளவில் வழங்குதல் - வழிகாட்டு நெறிமுறைகள் (Standard Operating Procedure) வழங்குதல் - செலவினம் அனுமதித்தல் - தொடர்பாக.

பார்வை :

1. சென்னை-09, பள்ளிக்கல்வித் துறை, அரசு செயலாளரின் கடிதம் எண்.773/ப.க.4(1)/2024 நாள்.31.01.2024.
2. சென்னை-06, தமிழ்நாடு பள்ளிக்கல்வித் துறை இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.70358/அ5/ இ4/2023 நாள். 21.12.2023 மற்றும் 04.03.2024.
3. இந்நிறுவன இயக்குநரின் செயல்முறைகள் ந.க.எண்.523/ஊ4/2023 நாள்.04.03.2024, 06.03.2024 மற்றும் 08.03.2024.

-----

பார்வை (1) இல் காணும் அரசு செயலாளரின் கடிதத்தில், உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உள்ள பல்வேறு ஆய்வகங்கள் குறித்தும், இவற்றை பராமரிக்கும் ஆய்வக உதவியாளர்களின் பணிகள் குறித்தும் விரிவான வழிகாட்டுதல்கள் மற்றும் மாணவ / மாணவியர்கள் பல்வேறு திறன்களை பெறும் நோக்கில் பள்ளிகளில் செயல்படும் அடல்டிங்கரிங் ஆய்வகம், உயர் தொழில்நுட்ப ஆய்வகம் / மெய்நிகர் வகுப்பறை மூலம் கற்பித்தல், பள்ளியில் உள்ள அறிவியல் ஆய்வகங்கள், மொழி ஆய்வகங்கள், தொழிற்கல்வி ஆய்வகங்கள், கணித ஆய்வகங்கள் போன்றவற்றை ஆய்வக உதவியாளர்கள் திறம்பட பராமரிக்க வேண்டும் என்றும்,

www.Padasalai.Net

ஆய்வக பணிகளை மட்டுமே மேற்கொள்ள வேண்டும் என்றும் பள்ளிக்கல்வி இயக்ககத்தின் மூலம் தங்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

ஆய்வக உதவியாளர்கள் இப்பணிகளை செவ்வனே பள்ளிகளில் மேற்கொள்ளும் பொருட்டு, மாநில அளவிலான பயிற்சி சென்னையில் வழங்கப்பட்டு, இதனைத் தொடர்ந்து மாவட்ட அளவிலான பயிற்சி அந்தந்த மாவட்டங்களில் நடைபெற்று முடிவுற்றுள்ளது.

மேற்படி மாவட்ட அளவிலான பயிற்சியில் பங்கேற்காத, தேர்வு எழுதாத, தேர்வில் தோல்வியுற்ற ஆய்வக உதவியாளர்களுக்கு மீள பயிற்சியினை அக்டோபர் மாதத்தில் மண்டல அளவில் வழங்கிட இந்நிறுவனத்தின் மூலம் திட்டமிடப்பட்டுள்ளது. எனவே, இந்நிறுவனத்தின் கீழ் இயங்கும் அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் தங்களது மாவட்டத்தில் பயிற்சியில் பங்கேற்காத, தேர்வு எழுதாத, தேர்வில் தோல்வியுற்ற ஆய்வக உதவியாளர்களுக்கு 14.10.2024 முதல் 19.10.2024 6 நாட்கள் (1 சுற்று வீதம்) மீள பயிற்சி நடத்திடவும்மாறு அறிவுறுத்தப்படுகிறது.

இப் பயிற்சியை காலை 09.30 மணி முதல் மாலை 05.00 மணி வரை திட்டமிட்டு நடத்திடுமாறும், ஆய்வக உதவியாளர் வருகை, மதிப்பீடு போன்றவற்றை மேற்கொள்வதற்கு பயிற்சி நடைபெறும் அறையில் இணையதள வசதி ஏற்படுத்தியும், பயிற்சி பங்கேற்பாளர்களின் வருகைப் பதிவினை EMIS மூலம் மேற்கொள்ளுமாறும் மதுரை, திருச்சி, திருவண்ணாமலை மற்றும் கோவை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது. இப்பயிற்சிக்கான நிதி "திட்டம் மற்றும் செயல்பாடுகள்" நிதியிலிருந்து மட்டுமே செலவினங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும் என மதுரை, திருச்சி, திருவண்ணாமலை மற்றும் கோவை மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

இப்பயிற்சியை செவ்வனே நடத்திடுமாறும், பயிற்சி முடிவுற்ற பின்னர் பங்கேற்ற ஆய்வக உதவியாளர்களுக்கு உரிய சான்றினை வழங்கியும் அதனை அவர்களது பணிப்பதிவேட்டில் உரிய பக்கங்களில் பதிவேற்றம் மேற்கொள்ள உரிய பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தி பயிற்சி நடவடிக்கையினை மேற்கொள்ளுமாறு அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவன முதல்வர்கள் மற்றும் மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இயக்குநர்

9/10/24

www.Padasalai.Net

பெறுநர்

1. முதல்வர்கள், அனைத்து மாவட்ட ஆசிரியர் கல்வி மற்றும் பயிற்சி நிறுவனம்.
2. அனைத்து மாவட்ட முதன்மைக்கல்வி அலுவலர்கள்.

நகல்

1. சென்னை-09, தலைமைச் செயலகம், பள்ளிக்கல்வித் துறை, அரசு செயலாளர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
2. சென்னை-06, ஒருங்கிணைந்த பள்ளிக்கல்வி, மாநிலத் திட்ட இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக பணிந்து அனுப்பப்படுகிறது.
3. சென்னை-06, பள்ளிக்கல்வி இயக்ககம், இயக்குநர் அவர்களுக்கு தகவலுக்காக கனிவுடன் அனுப்பப்படுகிறது.

www.Padasalai.Net

## Lab Assistant Training For Absentees and Failed Candidates
## 14.10.2024 - 19.10.2024

| S.No | REGION | District | Total No. of Lab Assistants | Total No. of failed candidates | Not Participated Lab Assistant | Exam Not Attended |
|---|---|---|---|---|---|---|
| 1 | MADURAI | MADURAI | 143 | 5 | 9 | 0 |
| 2 | | KANNIYAKUMARI | 121 | 0 | 2 | 0 |
| 3 | | (THIRUNELVELLI + THENKASI) | 144 | 1 | 5 | 0 |
| 4 | | THOOTHUKUDI | 81 | 2 | 3 | 0 |
| 5 | | VIRUDHUNAGAR | 180 | 5 | 3 | 0 |
| 6 | | RAMNAD | 119 | 1 | 2 | 0 |
| 7 | | SIVAGANGAI | 141 | 0 | 1 | 0 |
| 8 | | DINDUGAL | 136 | 1 | 3 | 0 |
| 9 | | THENI | 86 | 0 | 4 | 0 |
| 10 | TRICHY | THANJAVUR | 227 | 2 | 2 | 0 |
| 11 | | ARIYALUR | 97 | 0 | 3 | 0 |
| 12 | | TRICHI | 179 | 7 | 5 | 2 |
| 13 | | MAILADUTHURAI + NAGAPATTINAM | 155 | 0 | 1 | 0 |
| 14 | | THIRUVARUR | 139 | 0 | 9 | 0 |
| 15 | | KARUR | 100 | 0 | 2 | 1 |
| 16 | | PUDUKKOTTAI | 180 | 10 | 1 | 1 |
| 17 | | CUDDALORE | 219 | 7 | 7 | 0 |
| 18 | | PERAMBALUR | 63 | 0 | 12 | 0 |
| 19 | | CHENNAI | 75 | 0 | 7 | 3 |
| 20 | | (VILLUPURAM + KALLAKURICHI) | 312 | 0 | 13 | 0 |

www.Padasalai.Net

| S.No | REGION | District | Total No. of Lab Assistants | Total No. of failed candidates | Not Participated Lab Assistant | Exam Not Attended |
|---|---|---|---|---|---|---|
| 21 | T.V. MALAI | CHENGALPATTU + KANCHIPURAM | 218 | 7 | 8 | 0 |
| 22 | | THIRUVANNAMALAI | 300 | 12 | 7 | 1 |
| 23 | | VELLORE + RANIPET + THIRUPATHUR | 318 | 2 | 7 | 0 |
| 24 | | THIRUVALLUR | 231 | 3 | 8 | 0 |
| 25 | COIMBATORE | DHARMAPURI | 198 | 1 | 4 | 0 |
| 26 | | NILGIRI | 95 | 10 | 2 | 0 |
| 27 | | KRISHNAGIRI | 250 | 15 | 6 | 0 |
| 28 | | NAMAKKAL | 168 | 7 | 10 | 1 |
| 29 | | ERODE | 186 | 24 | 5 | 1 |
| 30 | | THIRUPPUR | 133 | 2 | 1 | 1 |
| 31 | | SALEM | 263 | 39 | 9 | 1 |
| 32 | | COIMBATORE | 163 | 3 | 8 | 1 |
| **TOTAL** | | | **5420** | **166** | **169** | **13** |

9/10/24